ஸ்ரீ தன்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
சித்திரை

தொகுதி 33
பகுதி 5

Vol. 33
No. 5

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் T. S ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

மருந்துக்கு மருந்து	...	81
தமிழ் வைத்தியத்தை வளர்க்க அரசு ஆதரவு அளிக்கும்	...	83
தமிழ் நாட்டில் 3.8 லட்சம் பெருக்கு நீரிழிவு	...	86
ஆரோக்கிய கல்பத்துருமம்	...	87

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered THE ARYA VAIDYA SALA KOTTAKAL Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை:

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள்:

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ :
31, A. சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும்
வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும்,
சில்லரையாகவும் கிடைக்கும்.

எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 5-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங் டைரக்டர்.

GRAM : KALIA

Phone: { Off. 3232
Res. 4343 }

KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

Price List		Rs. ps.
Pure Musk per gram		50-00
Pure Saffron		2-50
Pure Gorochanam per gram		12-00
Pure Pearls Spl.	,,	11-00
,, No. 2	,,	7-00
,, No. 3	,,	4-00
Pure Ambar No. 1	,,	3-50
,, No. 2	,,	2-50
,, No. 3	,,	2-00
Pure Silver Leaves	,,	0-80

PACHAKARPURAM

Spl. Bhimseni per gram		0-30
Singapuri (Yellow)	,,	0-25
German or Japan	,,	0-20
Powder Pachakarpuram		0-06
Pure Menthol	,,	0-45
Pure Thymol	,,	0-20
Ashtavargam	per Kilo	7-50
Jiwak Rishwak	,,	2-50
Meda Mahameda	,,	8-00
Kakoli Kshir Kakoli	,,	8-00
Ridhi Vridhi		12-00
Silajit (Kalmodam)		
Suryatapi Silajit No. 1	,,	100-00
No. 2	,,	85-00

CRUDE DRUGS

Attis Bitter	,,	100-00
Beedana	,,	20-00
Guggulu Shudh	,,	12-00
Gowela	,,	60-00

Price List		Rs. Ps.
Kuth No. 1	per Kilo	6-50
Moosli White	,,	15-00
Pushkar mool	,,	6-50
Rose Flower Dry	,,	10-00
Som Lata	,,	10-00
Salib Panja	,,	85-00
Salib Gatha	,,	20-00
Shingraf	,,	300-00
Tiger's Fat	,,	45-00
Bears Fat	,,	40-00
Pure Vanslochan	,,	80-00

AYURVEDIC MEDICINE

Chander Prabha	per Kilo	70-00
Chavan prash	,,	10-00
Gudoochi Sattoo (Sindi Maw)	,,	12-00
Ras Sindur	,,	300-00
Shudh parad	,,	300-00
Swaran Vang	,,	200-00
Yogaraj Guggulu	,,	30-00
Kaishore ,,	,,	30-00
Maha Yogaraj ,,	,,	140-00
Abrak Bhasam	,,	200-00
KantLoh Bhasam	,,	85-00
Loh Bhasam Special	,,	150-00
Shring Bhasam	,,	35-00
Sankh Bhasam	,,	30-00
Mandur Bhasam	,,	35-00
Silajit Bhasam	,,	35-00
Silver Bhasam	,,	700-00
Swaran Makshik	,,	80-00
Sulphur Purified	,,	50-00
Tamber Bhasam	,,	300-00
Sidh Makar Dhwaj	per gram	4-20
Makar Dhwaj ordinary		0-80

Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika

தந்தி : " அம்ருதம் "   P. B. No. 1382.   போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள் :

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி :	போன் ;	585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மத்ராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞும்பலம், எர்ணகுளம், கொச்சின்-18	,,	32988
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,,	92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னானி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு. திருச்சூர்-1	,,	378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18,	,,	33758
12	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,,	4891
13.	229, ராஜவீதி, கோயமுத்தூர்-1	,,	33988
14.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு. கண்ணனூர்-2		
15	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)		

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும்:

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS

(REGD.)

Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,

LUDHIANA ~ PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 33	விரோதிகிருது சித்திரை	பகுதி 5
Vol. 33	1971 மே	No. 5

நம: சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

மருந்துக்கு மருந்து

நல்ல மருந்துகள் நமது உடலில் வேலை செய்து உடலைக் கெட்டிப்படுத்துவதுடன் நோய்களைத் தீர்க்கின்றன. அந்த மருந்துகளை நல்ல நிலையில் தயார் செய்யவும் அதற்கு உபயோக மான உடல் கூறு சாஸ்திரம், வியாதி லட்சணம், முதலியன தெரியவும் ஏராளமான பணம் அரசின் ஆதரவு, கல்லூரிகள் ஆராய்ச்சி நிலையங்கள் தேவைப்படுகின்றன. அப்போதுதான் நமது உடலைப் புத்துயிர்ப்படுத்தும் மருந்துகளைப் புத்துயிர்பெறச் செய்ய முடியும்

சென்ற 3-4-71 அன்று காஞ்சியில் நமது கனம் சுகாதார மந்திரி அவர்கள் பேசியுள்ளது மருந்துக்கும் மருந்துபோல் உள்ளது சித்த வைத்யத்திற்கு புத்துயிர் அளிக்க கனம் மந்திரி

அவர்கள் உறுதி கூறியுள்ளார். அது நமக்கு மிகவும் சந்தோஷமான சமாச்சாரம். மேலும் அவர் கூறியுள்ள மற்ருெரு விஷயம் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாகும் எந்தக் கலைக்கும் முக்ய ஸ்தாபனம் தலைநகரில் இருக்கவேண்டும். அதிலும் இது வைத்ய கலைக்கு மிகமிக முக்யம். அதிக ஜனத்தொகை உள்ள இடம் தான் நன்கு பழகுவதற்கு ஏற்ற இடமாகும். அப்படி தலைநகரில் இல்லாத கலைஸ்தாபனம் தலைஇல்லாத மூண்டம் போன்றதாகும். ஆனல் நமது துரதிருஷ்டத்தால் நல்ல இடம் நமது கையை விட்டுப் போய்விட்டது. மறுபடியும் அந்த இடம் கிடைத்தால் தான் முழு அளவில் சந்தோஷம் ஏற்படும். மிகுந்த தேசபக்தி கொண்ட பனகல் மகாராஜா அவர்கள் கீழ்ப்பாக்கத்தில் இந்திய வைத்ய கல்லூரியை ஆரம்பித்தார்கள். அது நல்ல முறையில் வளர்ந்தது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அதிலும் டாக்டர் ராஜன் அவர்கள் மந்திரியாக இருந்த காலத்தில் அதை ஆங்கிலக் கல்லூரியாக்க சூழ்ச்சிகள் நடந்தன. அந்தக் கல்லூரியில் ஆங்கிலப் படிப்பைப் புகுத்தி நாளடைவில் படிக்கின்றவர்களை ஆங்கில டாக்டர்கள் போல் எண்ணம் ஏற்படச் செய்தனர் பிறகு திரு. மாணிக்கவேலர் காலத்தில் அந்தக் கல்லூரி ஆங்கில வைத்யக் கல்லூரியாக உருமாறியது இது மிகவும் அநீதியாகும். ஸ்தாபகர்கள் வட்சியத்திற்கு விரோதமானது. ஆக்ரமிப்பிற்குச் சமானமானது. இந்நிலையில் தலைநகரில் இந்திய வைத்தியத்திற்கு அரசாங்க ஆதரவு அஸ்தமனம் ஏற்பட்டது எவ்வளவோ எழுதினேம், முறையிட்டோம். செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றுதான் ஆனது. ஆனல் காலச்சக்ரம் சுழன்று வருகிறதல்லவா, கீழே சென்ற பாகம் மேலே வரவேண்டும் அல்லவா? ஆகவேதான் தற்சமயம் நமது கனம் சுகாதார மந்திரி அவர்கள் சென்னையில் ஒரு சித்த வைத்யக் கல்லூரி துவக்க தீவிர முயற்சி செய்து வருவதாக பேசியுள்ளார். இது மிகவும் வரவேற்கத்தக்கது. நல்ல காலத்தையே இது குறிக்கும். தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் இடம் கிடைத்தால் தான் இந்திய வைத்யம் முன்னேற முடியும். இதற்காக அரசாங்கத்திற்கு மிக்க நன்றி.

தவிர பஞ்சாயத்துக்களிலெல்லாம் சித்த வைத்ய மருந்தகம் திறக்கப் போவதாயும் கனம் மந்திரி அவர்கள் கூறியுள்ளது பொன்னுடன் மணமும் சேர்ந்தது போல் மிகவும் சந்தோஷ சமாச்சாரம். ஆகவே தற்போதுள்ள கனம் சுகாதார மந்திரி அவர்கள் தமிழ் நாட்டில் மருந்துக்கும் மருந்தாக விளங்குகிருர் என்பது நமது கருத்து.

தமிழ் வைத்யத்தை வளர்க்க அரசு ஆதாவு அளிக்கும்

மதுரை வைத்ய மகாநாட்டில் மந்திரி பிரசங்கம்

தமிழ் வைத்ய முறையான சித்த வைத்யம் வளர தமிழக அரசு இயன்ற உதவிகளனைத்தையும் அளிக்கும் என்று 17-4-71-ல் மதுரையில் நடைபெற்ற மாநில சித்த வைத்ய சங்க மகாநாட்டில் பேசுகையில் விவசாய மந்திரி திரு. அன்பில் தர்மலிங்கம் உறுதியளித்தார்.

தமிழக சித்த வைத்ய மகாநாடு இன்று மதுரை தமுக்கம் கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது தமிழகமெங்கிலுமிருந்து திரளான பிரதிநிதிகள் கலந்துகொண்ட இம்மகாநாட்டிற்கு 96 வயதான முதுபெரும் சித்த வைத்யர் திரு. எஸ். எஸ். ஆனந்தம் தலைமை வகித்தார்.

வரவேற்புரை

வந்திருந்தோரனைவரையும் வரவேற்று மதுரை சித்தவைத்ய சங்கத் தலைவரும் வரவேற்புக்குழுத் தலைவருமான பண்டிட் திரு. பி முத்துகருப்ப பிள்ளை பேசுகையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சித்தர்கள் மெய்யுணர்வால் ஆய்ந்து தெளிந்து அளிக்கப்பட்ட இம்முறை இடைக்காலத்தில் இயற்கை கோளாறுகளாலும் அசட்டையினாலும் நலிந்ததென்றும் மீண்டும் இத்தமிழ் வைத்யமுறை செழித்து வளர தமிழக அரசு உரிய உதவிகளைச் செய்யவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பரம்பரை வைத்தியர்கள் 'பி' பிரிவில் அரசுப்பதிவு செய்து கொள்வதற்கான கால வரை 70 ஆகஸ்டுடன் முடிந்துவிட்டதென்றும் இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் பதிவு செய்து கொள்ளாதிருப்பதால் அந்தக் கால வரையை இன்னும் 5 ஆண்டுகளுக்காவது நீடிக்க வேண்டுமென்று 'பி' பிரிவு தகுதி காலத்தை நிரந்தரமாக்கி ஆண்டுதோறும் தேர்வு நடத்தி பதிவு செய்யும் வழிவகையினை வகுக்குமாறும் ஏற்கனவே கிராம மருத்துவ மனைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ள 'பி' பிரிவினரை 'ஏ' பிரிவினர் வேலைக்கு கிடைக்கும்போது நீக்கிவிடக்கூடாதென்றும் 'பி' பிரிவினர் சம்பள விகிதத்தை உயர்த்துவதுடன் புதிய மருத்துவ மனை

களில் இரு பிரிவினரையும் நியமிக்க வேண்டுமென்றும் கூறினர். பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட சித்த வைத்ய கல்லூரி களை ஜில்லாதோறும் ஏற்படுத்துமாறும் மத்திய மாநில அரசு களின் சகல சுகாதார மருத்துவ குழுக்களிலும் சித்தவைத்ய பிரதி நிதிகளுக்கு இடமளிக்கும்படியும் இத்துறைக்கு மத்திய அரசு அளிக்கும் மான்யத்தை உயர்த்த வேண்டுமென்றும் பள்ளி, கல்லூரி பாடப்புத்தகங்களில் தமிழ் வைத்யம்பற்றியும் நோய் அணுகா முறைபற்றியுமுள்ள பகுதிகள் இடம்பெற வேண்டுமென் றும் திரு. முத்துக்கருப்பப் பிள்ளை பேசுகையில் கூறினர்.

மந்திரி பிரசங்கம்

விவசாய மந்திரி திரு அன்பில் தர்மலிங்கம் பேசுகையில் எங்கும் எதிலும் தமிழ் எனக் கொள்கை கொண்ட தமிழக அரசு தமிழ் வைத்யர் கோரிக்கைகளை அநுதாபத்துடன் பரிசீலித்து தக்க முடிவு எடுக்குமென்றும் பழந்தமிழ் வைத்ய முறை தமிழக மெங்கும் பரவவேண்டுமென்று அண்ணு கூறிவந்துள்ளாரென்றும் இது இந்த முறையில் அவர் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டு கிறதென்றும் குறிப்பிட்டார். இம்மருத்துவ துறையில் ஈடுபட்ட முன்னேர்களில் பலர் தாங்கள் கண்டுபிடித்த அரிய மருந்து களையும் முறைகளையும் வெளியே சொல்லாமல் ரகசியமாகவே வைத்திருந்ததால் பிறருக்கு அது தெரிந்து பயன்படும் நிலை இல் லாமல் போய்விட்டதென்றும் அந்த நிலை மாறி இன்று இம் மருத்துவ முறை பரவ சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவது வரவேற்கத் தக்கதென்றும் மந்திரி குறிப்பிட்டார்.

கோவை திரு. ஜி. டி. நாயுடு

கோவை தொழிலதிபர் திரு. ஜி. டி நாயுடு பப்பாளி பழ வைத்ய உபயோகத்தைப்பற்றி பேசுகையில் இந்தப் பழத்தைக் கொண்டு அல்வா போன்ற தித்திப்புப் பொருட்களையும் காய்களை குழம்பிலும் உபயோகிக்கலா மென்றும் தோலை பக்குவப்படுத்தி பொடி செய்து சாப்பிட்டால் வயிற்றுவலி குணமாகுமென்றும் கூறினர்.

பப்பாளி பயிரிடும் முறையை மதுரை வைத்யக் கல்லூரி டீன் டாக்டர் சி. வி. கோவிந்தசாமி விளக்கினர்.

கண்காட்சியை திறந்துவைத்து இம்காப்ஸ் தலைவர் திரு. வி. நாராயணசாமி பேசுகையில் தமிழ் மருத்துவ தொழிலுக்குத் தேவையான ரசம், கந்தகம் போன்ற மூலப்பொருள்கள் தனிப்

பட்ட வைத்யருக்கும் தாராளமாக கிடைக்க வழிசெய்ய வேண்டு மென்றும் சித்த மருந்துகள்பற்றி நவீன முறையில் ஆராய்ச்சி செய்து பரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டு மென்றும் குறிப்பிட்டார்.

இதர வைத்ய முறைகளில் குணமாகாத நோய்களையும் குணப் படுத்தும் மருந்து சித்த வைத்யத்தில் உள்ளதென்று மதுரை நகரசபைத் தலைவர் திரு. எஸ். முத்து எம். எல். சி கூறினர்.

ஆரம்பத்தில் தேசீயக் கொடியை புது காங்கிரஸ் பிரமுகர் எஸ். திருப்பெருந்துறையும் சித்தர் கொடியை டாக்டர் எஸ் காளி முத்துவும் ஏற்றினர்.

சித்த வைத்ய சிறப்புகள்பற்றி டாக்டர்கள் எஸ். ஆர். சிவராஜ், எஸ். எஸ். ஆனந்தம், க ஆறுமுகநாதன், கொல்லிமலை சடைச்சாமி, முதலியோர் பேசினர்.

மாலையில் இந்திய மருத்துவ இயக்குனர் டாக்டர் சி. எஸ். உத்தமராயன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கை டாக்டர் பி. எம். வேணுகோபால் துவக்கி வைத்தார். புற்றுநோய், ஆஸ்த்மா, நீரிழிவு நோய்பற்றி நடைபெற்ற இக்கருத்தரங்கில் பலர் பங்கு கொண்டனர்.

வந்திருந்த தலைவர்களை வரவேற்புக்குழு சார்பில் பண்டிட் திரு. பி. முத்துகருப்ப பிள்ளை, கி. சோமசுந்திரம், ராஜகோபாலன் முதலியோர் வரவேற்றனர்.

———

சந்தாவை அனுப்புங்கள்

மகாமண்டலத்தின் 1971 வருஷத்திய சந்தாவை இம்மாத முடிவிற்குள் அனுப்பி உதவக்கோருகிறோம். அடுத்த இதழுள் மகாநாட்டுத்தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பத்திரங்கள் சந்தா அனுப்பியவர்களுக்கு மட்டுமே அனுப்பப்படலாம் என நிலயம் இருப்பதால், இது சமயத்தில் பூரண ஒத்துழைப்புடன் சந்தாவை அனுப்பி உதவக் கோருகிறேன். ஜூன் இதழை சந்தா அனுப் பாதவர்களுக்கு வழக்கம்போல் V. P.யில் அனுப்புவார்கள்.

———

தமிழ்நாட்டில் 3·8 லட்சம் பேருக்கு நீரிழிவு

சென்னை, ஏப்ரல் 5—தமிழ்நாட்டில் 3·8 லட்சம் பேர் நீரிழிவு வியாதியால் கஷ்டப்படுகின்றனர் என்று இந்நோய் ஆராய்ச்சிப் பிரிவு மதிப்பிட்டுள்ளது.

சென்னை நகரில் மட்டும் 30000 பேருக்கு இந்நோயுள்ளது ஜனத்தொகையில் 1·5 சதவிகிதம் இந்நோயுள்ளவர்கள்.

மாநில சுகாதார காரியதரிசி திரு. கே. ஏ. அம்பாசங்கர் இன்று இங்கு நிருபர்களிடம் பேசுகையில் 7ௗ "உலக சுகாதார தினம்" கொண்டாடப்பட இருக்கிறது என்றும், நீரிழிவு வியாதிக்கு குணம் காண்பது விழாவின் நோக்கம் என்றும் அன்று கீழ்ப் பாக்கம் ஆஸ்பத்திரியில் நீரிழிவு நோய் இருக்கிறதா என்று இலவசமாக பரிசோதித்துக் கொள்ளலாம் என்றும் கூறினர்.

சோற்றுக்கற்றாழை இலையிலிருந்து தயாரித்த ஊசி மருந்து மூலம் நீரிழிவு வியாதியை நிரந்தரமாக குணப்படுத்த முடியும் என்று ரஷியர்கள் கூறுகின்றனர் என்றும் கீழ்ப்பாக்கம் ஆராய்ச்சிப் பிரிவு சோற்றுக் கற்றாழையை ஆராய்ச்சி செய்து வருகிறது என்றும் இவர் கூறினர்.

தஞ்சை மகாநாடு

அடுத்த தமிழ்நாடு ஆயுர்வேத மகாநாட்டைத் தஞ்சையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தஞ்சை ஸரஸ்வதி மஹாலய நூல் நிலைய நிர்வாகக்குழுக் காரியதர்சி திரு. N. கந்தஸாமி பிள்ளை அவர்களும், தஞ்சை மத்திய ஆயுர் வேத ஆராய்ச்சிக்கழகத் தலைமை ஆராய்ச்சியாளர் திரு V. S. வெங்கடசுப்பிரமணிய சாஸ்திரீ அவர்களும் சித்த ஆராய்ச்சியாளர் திரு. A. ஷண்முகவேலன் அவர்களும் இதில் சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். அடுத்த இதழில் இதுபற்றிய விபரம் முழுவதும் தெரிவிக்க இயலும்.

ஆரோக்கிய கல்பத்துருமம்

பால சிகித்ஸை

]தமிழ் மொழியாக்கம்]

இரண்டாம் அத்யாயம்

ஜ்வராதிகாரம்

எல்லா ஜ்வரங்களிலும் கடுகு ரோகிணியைப் பொடித்து முலைப்பாலில் கொடுக்கலாம். அல்லது பர்படகப் பொடியையோ, அல்லது பர்படகத்தையும் கோரைக்கிழங்கையும் சேர்த்துப் பொடித்தோ முலைப்பாலுடன் கொடுக்கலாம்.

சிறுகாஞ்சூரி வேரின் தூள் அல்லது புஷ்கர மூலத்தின் தூள் அல்லது வட்டத் திருப்பி கொத்துமல்லி விதையின் தூள் இவை களைப்பாலில் கரைத்துக் கொடுக்கலாம். தாளிசபத்திரி, நில வேம்பு, வசம்பு, வாய்விடங்கம், கோரைக்கிழங்கு, பர்படகம் இவைகள் ஸம எடை சேர்த்துச் செய்த சூர்ணத்தை தேனில் குழைத்துக்கொடுக்கலாம்.

இந்த யோகங்கள் எல்லாம் எல்லா ஜ்வரங்களிலும் கொடுக் கத்தக்கவையே. இவை அநுபவமுள்ள விருத்த வைத்யர்களால் கையாளப்படுபவை. இவைகளைக் கொண்டே பிறந்து பதினைந்து நாட்களுக்குட்பட்ட குழந்தைகளின் ஜ்வரத்திற்கு சிகிச்சை புரிய வேண்டும். வேறு கஷாயம் முதலியவை தேவையில்லை. பதினைந்து நாட்களுக்கு மேற்பட்டு கஷாயம் முதலியவைகளையும் கொடுக்கலாம்.

வாதஜ்வரத்தில்-நிலவேம்பு, கோரைக்கிழங்கு, ஜீரகம் கொத்து மல்லி விதை அரத்தை இவைகளைத் தூள்செய்து முலைப்பா லில் குழப்பிப் புகட்ட வாதஜ்வரம் நீங்கும். அல்லது வாய்விடங்கம் சுக்கு, கோரைக்கிழங்கு சதகுப்பை, யானைத்திப்பிலி, கடுகு ரோகிணி இவைகளைத் தூள்செய்து முலைப்பாலில் குழப்பிப் புகட்டலாம்.

பித்தஜ்வரத்தில் :- தண்ணீர் விட்டான் கிழங்கு, விலா முச்சைவேர், சந்தனம், கோரைக்கிழங்கு, இலுப்பைவைரம், கடுகுரோகிணி, பர்படகம் இவைகளைத் தூள் செய்து முலைப்

பாலில் குழப்பிக் கொடுக்கவும். அல்லது அதிமதுரம், தண்ணீர் விட்டான்கிழங்கு, கோரைக்கிழங்கு, விலாமுச்சம்வேர், செங் கழுனீர் கிழங்கு, வெட்டிவேர், பர்படகம் இவைகளைத் தூள் செய்து சர்க்கரை சேர்த்து முலைப்பாலில் குழப்பிக் கொடுக்கவும்.

கபஜ்வரத்தில் ,- வசம்பு, ஓமம், பூலாங்கிழங்கு, கோரைக் கிழங்கு, திப்பிலி இவைகளைத் தூள்செய்து இஞ்சிச்சாறும் முலைப் பாலும் சேர்த்துக் குழப்பிப் பலதடவைகளாக அடிக்கடி புகட்டவும். அல்லது ஜீரகம், கருஞ்சீரகம், வசம்பு, நிலவேம்பு, பெருங்காயம், சுக்கு இவைகளைப் பொடித்து முன்யோகம்போல் கொடுக்கவும்.

வாதபித்த ஜ்வரத்தில் :- கோரைக்கிழங்கு, புஷ்கரமூலம் பர் படகம் இவைகளைத் தூள் செய்து புதுவெண்ணெய்யில் குழைத்துக் கொடுக்கவும்.

வாதகப ஜ்வரத்தில் :- சுக்கு, திப்பிலி, மிளகு, ஜீரகம், கோரைக் கிழங்கு, கடுகுரோகிணி, பர்படகம் இவைகளைப் பொடித்து நாட்பட்ட சர்க்கரை சேர்த்து கொடுக்கவும். சர்க்கரை இல்லாவிடத்து தாய்ப்பாலிலோ, உள்ளிப்பூண்டு தைலத்திலோ கொடுக்கலாம்.

பித்த கபஜ்வரத்தில் :- கோரைக் கிழங்கு, நெல்லிமுள்ளி, இவைகளின் தூளை முலைப்பாலில் கொடுக்கலாம் அல்லது இலுப் பை வைரம் கோரைக்கிழங்கு, திப்பிலி, பர்படகம் இவைகளைப் பொடித்தும் முலைப்பாலில் கொடுக்கலாம்.

ஸந்நிபாத ஜ்வரத்தில் :- கருநொச்சிவேர், எருக்கின் வேர் கோரோசனை இவைகளைச் சமனெடை சேர்த்து பொடித்து சர்க் கரை சேர்த்து முலைப்பாலில் கொடுக்கவும் அல்லது விஷ்ணுக் ராந்தி சீரா செங்கழனீர் கிழங்கு (ஸஹதேவி) கோரோசனை பச்சைக் கர்பூரம் இவைகளைத் தூள் செய்து முலைப்பாலில் கொடுக்கலாம்.

ஜ்வரபைரவ சூர்ணம் :- சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலரிசி, ஜீரகம் கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, நெல்லிமுள்ளி, கடுக்காய் ஆடாதொடைவேர், சிறுகாஞ்சூரிவேர் நிலவேம்பு மல்லிவிதை விலாமுச்சைவேர், நன்னாரி, யானைத்திப்பிலி, முள்ளுக்கத்திரி தேவதாரு, ஓமம், இவை வகைக்கு (ஒரு தோலா) சமனெடை எடுத்துத் தூள்செய்யவும். பிறகு ருத்ராக்ஷம் முத்து, கலைமான் கொம்பு, காண்டாமிருகத்தின் கொம்பு, கவயத்தின் கொம்பு

இவை ஐந்தும் முன்சொன்ன சூர்ணத்தின் கால்பங்கும், சாம் பிராணி பச்சைக்கர்பூரம், குங்குமப்பூ, இவை வீசம் பங்கும் சேர்த்து முலைப்பாலிட்டு அரைத்து அடிக்கடி நாக்கில் தடவவும். அல்லது சர்க்கரை இஞ்சிச்சாறு இவைகளுடன் சேர்த்துக் கொடுக்கவும். இது எல்லா ஜ்வரங்களையும் போக்கும்.

ஜீர்ண ஜ்வரத்தில்: ஜ்வரம் நாட்பட்டு ஆமபாகம் ஏற்பட்டிருந் தால் சிறுதேக்கு கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, கோஷ்டம் இவைகளைச் சூர்ணித்து முலைப்பாலிலோ சர்க்கரையுடனே தேனு டனே சேர்த்து கொடுக்கலாம்

முறை ஜ்வரத்தில் : வல்லாரை. பர்படகம், கோரைக்கிழங்கு, கோஷ்டம், திப்பிலி இவைகளைத் தூள்செய்து கொடுக்க ஒருநாள் விட்டு வரும் ஜ்வரத்தில் நல்லது மூன்று நாள்விட்டு நான்காம் நாள் வரும் ஜ்வரத்தில் இந்த சூர்ணத்தை முலைப்பாலிலோ, உள்ளிப்பூண்டு தைலத்துடனே பழைய வெல்லத்துடனே கொடுக்கலாம். அல்லது மூட்டைப்பூச்சியை வெல்லத்திற்குள் வைத்துக் கொடுக்க இம்முறை ஜ்வரம் நீங்கும்.

இரவில் வரும் ஜ்வரத்தில் :- கொத்தமல்லி விதை, சீராசெங் கழ நீர் கிழங்கு (ஸஹதேவீ) துளிர் வெற்றிலை இவைகளை நிழலி லுலர்த்தித் தூள்செய்து சர்க்கரை, முலைப்பாலில் கொடுக்க இரவில் வரும் முறை ஜ்வரம் தீரும் அல்லது அரசின் துளிரை அரைத்துப் பசுவின் பாலில் குழப்பிக் கொடுக்கலாம். இது ரகசிய மானது. ஒருமாதம் கழித்த சிசுக்களுக்கும் பாலாலும் அன்னத் தாலும் வளர்க்கப்படும் சிசுக்களுக்கு மேல் கூறப்போகும் கஷா யங்களையும் வியாதி நிலைக்கேற்றவாறு கொடுக்கலாம்.

ஆகந்துக ஜ்வரத்தில் :- விஷக்காற்று கடினமான தேகாப் பியாசம் பயம் அபிசாரம் சாபம் திருஷ்டி இவைகளால் ஏற்படும் ஜ்வரங்களில் வசம்பை பாகலிலைச் சாற்றிலரைத்து பிசாசருத்ர மந்திர ஜபம் செய்து சிசுவின் உடலில் பூசவும். மேலும் இது விஷயமாக மந்திர ஜபங்கள் செய்ய வேண்டியதைச் செய்த பிறகே மருந்துகள் உபயோகிக்கபடவேண்டும்.

ஒரு மாதம் கழித்த சிசுவிற்கு காலம் தேசம் தேகநிலை இவை களை அனுசரித்து பத்தியமான ஆகாரங்களை நிச்சயிக்க வேண்டும்.

ஸர்வஜ்வரங்களிலும் நாகராஷ்டக கஷாயம்: —

கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சூரிவேர், கொத்தமல்லிவிதை, நிலவேம்பு, ஆடாதோடை சீந்திற்கொடி, சுக்கு இவைகளில்

ஏதாவதொரு திரவ்யத்துடன் சம எடை பர்படகம் சேர்த்துக் கஷாயமிட்டு தேகநிலைக் கேற்றவாறு சர்க்கரையும் ஜீரகப்பொடியும் மேம்பொடியாகச் சேர்த்துக் கொடுக்கவும் மேற்சொன்ன எட்டு சரக்குகளையும் வகைக்கு சம எடை சேர்த்துக் கஷாயமிட நாகராஷ்டக கஷாயமாகும் இதிலும் ஜீரகப்பொடியும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க ஜ்வரங்கள் தணியும்.

கடுகாஷ்டகம்: சீந்திற்கொடி, வெட்பாலையரிசி, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, விலாமுச்சம்வேர், நிலவேம்பு, கடுகுரோகிணி இவைகளில் ஏதாவதொரு திரவ்யத்துடன் சமஎடை புஷ்கர மூலம் சேர்த்துக் கஷாயமிட்டு அதில் திப்பிலி ஜீரகம் இவைகளின் பொடியும் தேனும் சர்க்கரையும் சேர்த்துக்கொடுக்க ஜ்வரம் தீரும். அல்லது இவ்வெட்டு திரவ்யங்களை வகைக்கு சம எடை சேர்த்துக் கஷாயமிட்டு முன்போல் ஜீரகப்பொடி, திப்பிலிப்பொடி, தேன், சர்க்கரை சேர்த்துக் கொடுக்க ஜ்வரங்கள் தீரும்.

வாதஜ்வரத்தில்: கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சிறுகாஞ்சூரிவேர், சுக்கு இவைகளின் கஷாயத்தை ஜீரகத்தூள் சேர்த்துக் கொடுக்க வாதஜ்வரங்கள் தீரும். அல்லது சிறுகாஞ்சூரிவேர், சித்தாமட்டிவேர், வில்வவேர், சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, சுக்கு, கொத்துமல்லிவிதை, பற்படகம் இவைகளின் கஷாயமும் ஜீரகப்பொடி சேர்த்துக் கொடுக்க நல்லது.

பித்தஜ்வரத்தில்: பர்படகத்தின் கஷாயத்தை சர்க்கரை சேர்த்துக் கொடுக்க பித்தஜ்வரம் தீரும். அல்லது கடுக்காய் பர்படகம், கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயமும் சீந்திற்கொடி விலாமுச்சம்வேர், கோஷ்டம், கோரைக்கிழங்கு, சந்தனம், சுக்கு இவைகளின் கஷாயமும் சர்க்கரைச் சேர்த்துக் கொடுக்கலாம்-

கபஜ்வரத்தில் சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, திப்பிலி, புஷ்கர மூலம், தேவதாரு, சீந்திற்கொடி, ஆடாதோடை, சுக்கு இவைகளின் கஷாயமோ, கடுக்காய், சுக்கு நிலவேம்பு, சீந்திற்கொடி, இவைகளின் கஷாயமோ; பர்படகம், குமிழம் வேர், வசம்பு, கொத்துமல்லிவிதை, சுக்கு இவைகளின் கஷாயமோ தேன் சேர்த்துக்கொடுக்க கபஜ்வரம் விலகும். அவ்விதமே முள்ளுக் கத்திரிவேர், சிறுகாஞ்சூரிவேர், சீந்திற்கொடி, சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளின் கஷாயத்தைத் திப்பிலிப் பொடி சேர்த்துக்கொடுக்கலாம்.

வாதபித்த ஜ்வரத்தில் கடுகுரோகிணி, சுக்கு, கோரைக்கிழங்கு, பர்படகம் இவைகளின் கஷாயத்தை சர்க்கரை சேர்த்துக் கொடுக்

கலாம். அல்லது சித்தாமுட்டி நெரிஞ்சில், நிலவேம்பு, கோரைக் கிழங்கு, சுக்கு, பர்படகம் இவைகளின் கஷாயமும் சர்க்கரை ஜீரகத்தூள் சேர்த்துக் கொடுக்கலாம்.

வாதகபஜ்வரத்தில் கடுகுரோகிணி. கடுக்காய், கோரைக்கிழங்கு, கண்டந்திப்பிலி, சரக்கொன்றைப்பட்டை இவைகளின் கஷாயம் தேன் சேர்த்தும்; கண்டங்கத்திரிவேர் சுக்கு சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் திப்பிலிப்பொடி சேர்த்தும்; நிலவேம்பு தேவதாரு பூலாங்கிழங்கு ஆடாதோடை சீந்திற்கொடி கோரை கிழங்கு இவைகளின் கஷாயம் திப்பிலிப்பொடி சேர்த்தும் கொடுக் கலாம்.

பித்தகப ஜ்வரத்தில் வேப்பம்பட்டை சந்தனத்தூள் கொத்து மல்லிவிதை சீந்திற்கொடி பதிமுகம் இவைகளின் கஷாயத்தில் சர்க்கரை சேர்த்து சாப்பிட ஜ்வரம் தணியும். திராக்ஷை சிறுகாஞ் சூரிவேர் நிலவேம்பு செஞ்சந்தனம் கொத்துமல்லிவிதை சீந்திற் கொடி பர்படகம் கோரைக்கிழங்கு. நன்னாரிவேர், நீலோத்பல கிழங்கு, சுக்கு. சிறுதேக்கு இவைகளின் கஷாயத்தில் சர்க்கரை ஜீரகத்தூள் சேர்த்துகொடுக்கலாம் இக்கஷாயத்தில் சிறு தேக்குக்குப் பதில் திப்பிலி சேர்த்தும் கஷாயமிடலாம்.

நாட்பட்டஜ்வரத்தில் சிறுதேக்கு கோரைகிழங்கு கடுகுரோகிணி கண்டங்கத்திரி கோஷ்டம் சுக்கு இவைகளின் கஷாயத்தை ஜீரகத்தூள் சேர்த்து கொடுக்கலாம். இதே கஷாயத்தைமுறை ஜ்வரங்களிலும் கொடுக்க நல்ல குணமளிக்கும். எருக்கம் பழுப் பும் கருநொச்சிவேரும் சேர்த்துக் கொடுக்க விசேஷ குண மளிக்கும்.

குளிர்ஜ்வரத்தில் ஜீரகம் சுக்கு திப்பிலி மிளகு மூக்கரட்டைவேர் விஷ்ணுக்ராந்தி மஞ்சள் மரமஞ்சள், மூங்கிலிலை சித்தாமுட்டி தேவதாரு சித்தரத்தை நிலவேம்பு தர்ப்பைவேர் காசாவேர் கடுக் காய் கடுகுரோகிணி கோஷ்டம் கருஞ்சீரகம் உள்ளிப்பூண்டு காட்டுத்துளசிவேர் இலந்தை இலை இவைகளை கஷாயமிட்டு வால்மிளகுப்பொடி சேர்த்து சாப்பிட குளிர்ஜ்வரம் முறை ஜ்வரம் நீங்கும்.

ஸந்நிபாத ஜ்வரத்தில் ஆடாதோடை கொத்துமல்லிவிதை நில வேம்பு வெட்டிவேர் கடுக்காய் பதிமுகம் சந்தனத்தூள் சீந்திற் கொடி சரக்கொன்றைகொட்டை கோரைக்கிழங்கு வட்டத்திருப்பி, சுக்கு வெட்பாலையரிசி தசமூலம் யானைத்திப்பிலி இவைகளின் கஷாயம் ஜீரகத்தூள் சேர்த்துச் சாப்பிட ஸந்நிபாத ஜ்வரம் நீங்கும்.

ஜ்வர சிகித்ஸா

வாந்தியுடனுள்ள ஜ்வரத்தில்: நாவல்தளிர், மாந்தளிர், விளாமுச்சம்வேர், ஆலம்விழுது இவைகளைக் கஷாயமிட்டு தேன் சேர்த்துக்கொடுக்க வாந்தி, மூர்ச்சை, நாவரட்சி இவை நீங்கும்.

ஜ்வராதிஸாரத்தில்: காட்டகத்திப்பூ சுண்டை வற்றல் இவைகளின் தூளை முலைப்பாலில் குழப்பிக் கொடுக்க ஜ்வராதிஸாரம் நீங்கும். சுண்டைவேர், திப்பிலி இவைகளைச் சூர்ணித்து முலைப் பாலுடனும், வசம்பு, அதிவிடயம் இவைகளைச் சூர்ணித்துத் தேனுடனும் கொடுக்கலாம்.

நாட்பட்ட ஜ்வரத்தில்: கடுகுரோகிணி கஷாயம் இருமடங்கு சேர்த்துப் பால் காய்ச்சி மோர் உரை குத்தி, மறுநாள் கடைந்து எடுத்த வெண்ணெய்யை ஒருவாரம் கொடுக்க நாட்பட்ட ஜ்வரம் தீரும்.

தலையிலிடும் குழம்பு: தலையிலுள்ள நீர்க்கால்களில் கபம் அடைத்து இருக்கும்போது, முருங்கையிலைச் சாற்றில் திரிகடுகத்தைத் தூள்செய்து தலையில் பத்துப் போடவும்; அல்லது நெய் சட்டிப் பூண்டின் சாறும் முலைப்பாலும் சிற்றுமணக் கெண்ணெய்யும் சேர்த்து மர்த்தித்து அதில் திரிகடுத்தூள் சேர்த்தும் தலையில் தடவலாம்.

நினைவிழத்தலைப்போக்க: சிற்றரத்தை, அமுக்கராக்கிழங்கு, கோரைக்கிழங்கு, வாஸனைகோஷ்டம், அதிமதுரம், சந்தனம், தேவதாரு, விளாமுச்சம்வேர், மரளிமஞ்சள், கடல்நுரை, பீநாரிக் கட்டை பூங்காவி, புளியிலைக்காம்பு, சிற்றுமுட்டி, வசம்பு, வெட்டிவேர், வெள்ளைக்குங்கில்யம், சென்னிநாயகம், அகில், திரிகடு, கடுகுரோகிணி, ஸஹஸ்ரவேதி இவை ஸமனெடை சேர்த்துப் பொடித்து, முருங்கையிலைச் சாற்றிலோ, அல்லது நெய்சட்டிப் பூண்டு ஆமணக்கெண்ணெய் முலைப்பால் இவைகளை மர்த்தித்த திரவத்திலோ கலந்து குழம்பாக்கித் தலையிலிட ஸந்நிபாதத்தில் ஏற்படும் நினைவிழத்தலைப் போக்கும். புத்தி தெளியும்.

தலைவேதனையில்: தலையில் கொதிப்பு, குத்துவலி, பொட்டில் வலி—இவைகளில் கோரைக்கிழங்கு, மான்கொம்பு, ஜீரகம், சந்தனம், கற்பூரம், நெல்பொரி இவைகளைத் தூள் செய்து கொண்டு முலைப்பாலிலரைத்து நெற்றியில் தடவ நல்லது,

அல்லது கோரைக்கிழங்கு, வெட்டிவேர், விளாமுச்சம்வேர், சந்தனம், கோஷ்டம், அதிமதுரம், மஞ்சிட்டி, நன்னாரி, கச்சோரம் நெல்பொரி, கற்பூரம் இவைகளை முலைப்பாலில் அரைத்து சிசுவின் நெற்றியில் தடவலாம்.

மார்பில் கபம் கட்டியிருந்தால்: மார்பு கழுத்து தொண்டை இவைகளில் கபம் கட்டியிருந்தால் ஜாதிக்காய், ஜாதிபத்ரி, அதிமதுரம், கிராம்பு, ஆசாளிவிதை, ஜீரகம், அக்ரகாரம், சதகுப்பை, கோரைக்கிழங்கு, இவைகளைத் தூள் செய்து இளநீர் ஜலத்தில் புழுக்கி அரைத்து தேன் விட்டுக் குழப்பி மார்பு கழுத்து இடை இவைகளில் தடவவும்.

கஞ்சி தயாரிக்க: வில்வவேர், கொத்துமல்லிவிதை, சுக்கு இவைகளைக்கொண்டு வென்னீர் தயாரித்து அதில் கஞ்சி தயாரித்துக் கொடுக்கவும்

முஸ்தாதி குளிகை: கோரைக்கிழங்கு, பர்படகம், சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளைக் கருவேப்பிலைச் சாற்றிலரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து அதை முலைப்பாலில் கரைத்துத் தனியாகவோ முன் சொன்ன ஜ்வரகஷாயங்களுடனோ அல்லது ஜீரகம், கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயத்துடனோ கொடுக்க ஜ்வரம் குறையும்.

திரிபலாதி குளிகை: திரிபலை, திரிகடு, தக்கோலம், கிராம்பு, உள்ளிப்பூண்டு, கோரைக்கிழங்கு, ஜீரகம், கருஞ்சீரகம, ஜாதிக்காய், கற்பூரம் இவை ஸமனெடை கருநொச்சியிலைச் சாற்றிலரைத்து மாத்திரை செய்யவும் இதை முலைப்பாலிலோ அல்லது முன் சொன்ன கஷாயங்களிலோ கொடுக்கவும். ஜ்வரம் குறையும்.

முஸ்தாஸுவர்ணாதி குளிகை: கோரைக்கிழங்கு, தங்கரேக்கு, ருத்ராக்ஷம், நிலவேம்பு, அதிமதுரம், புஷ்கரமூலம், விஷ்ணுகராந்தி இவைகளை சீந்தில் சாற்றிலும், நெல்லிக்காய் சாற்றிலும் அரைத்து மாத்திரை செய்யவும். எல்லா ஜ்வரங்களிலும் நல்லது. முக்கியமாக, புத்தி-ஞாபகசக்தி பிசகுவதிலும், வலிப்பு, உதரல், நாக்குழறல் முதலிய உபத்ரவங்களிலும் நல்லது.

மிருகசிருங்காதி குளிகை: மான்கொம்பு, வசம்பு, திரிகடு, கோரோசனை, சிற்றுமுட்டிவேர், கோரைக்கிழங்கு, ஜீரகம், கருஞ்ஜீரகம், ருத்ராக்ஷம், வெள்ளைக்குங்கில்யம், கர்பூரம் — இவைகளை

கிராம்பு கஷாயத்தில் அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி முலைப்பாலில் கொடுக்க எல்லா ஜ்வரமும் தணியும்.

திரியூஷணாதி குளிகை: திரிகடுகம், திரிபலை, அவுரிவேர், ருத்ராக்ஷம், கடுகுரோகிணி, வசம்பு, கர்பூரம், புனுகு, துரிசு, ஜீரகம், நில்வேம்பு வெள்ளைக் குங்கில்யம் இவைகளை சமனெடை சேர்த்து முடக்கத்தானிலைச் சாற்றில் அரைத்து குந்துமணியளவு மாத்திரை செய்து, கோரைக்கிழங்கு, ஜீரகம், நிலவேம்பு இவைகளின் கஷாயத்திலோ அல்லது தாய்ப்பாலிலோ தேனிலோ குழப்பிக் கொடுக்கவும்.

வைகுண்டாதி மாத்திரை: தும்பைப்பூ, கடுகுரோகிணி, சுக்கு, திப்பிலி, புஷ்கரமூலம், ஜீரகம் இவை வகைக்கு ஒரு தோலா, குங்குமப்பூ 6 தோலா, பச்சைகர்பூரம் $\frac{3}{4}$ தோலா இவைகளை ஜீரக கஷாயத்தில் அரைத்து மாத்திரை செய்துகொள்ளவும் முலைப்பாலிலோ சர்க்கரையுடனே கொடுக்க எல்லா ஜ்வரங்களும் நீங்கும்.

FOR
ALL YOUR REQUIREMENTS
OF
MUSK, SAFFRON, KANMADAM
(SHILAJIT) AND INDIAN HERBS Etc.

Please Contact :

PURI BROTHERS (REGD.)
MUSK MERCHANTS
JULLUNDUR-1

Grams : "VENKATESH" Phone : **3923**

இம்ப்காப்ஸ்

பூரண இயந்திர சாதன

வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு. சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:
4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு,
சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP./747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினல்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலேக்கட்டிகளே

எங்கிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர்:

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.